Stadt Chur



# Deutsch für die Schule

பாடசாலைக்கான டொச்மொழி

பாலர்பாடசாலைக்கு முன்னய வருடத்தில் டொச்மொழி கற்றல்

## பெற்றோருக்கான தகவல்கள்

**ஐந்து வயதில் ஒரு குழந்தை பாலர்பாடசாலைக்கு செல்லும்பொழுது அது டொச்மொழியை அறிந்திருக்க வேண்டும். குறைவாக டொச் பேசும் குழந்தைகள் அல்லது டொச் பேசாத குழந்தைகள் இந்த டொச்மொழி ஊக்குவிப்பு வகுப்பான „பாடசாலைக்கான டொச்" வகுப்புக்கு செல்ல வேண்டும்.**

**எதற்காக பாலர்பாடசாலைக்கு முன்பே டொச்மொழி கற்கவேண்டும்?**

பாலர்பாடசாலை நுழைவின் போது டொச்மொழி பெரிதாகத் தெரியாத அல்லது அறவே தெரியாத குழந்தைகள் தமது பாடசாலை வாழ்க்கையை மற்றய டொச்மொழி பேசும் குழந்தைகளுடன் ஒப்பிடும்போது குறைவான தகமைகளுடனயே ஆரப்பிக்கிறார்கள். டொச்மொழியில் ஒரு சிறந்த இடத்தைப் பிடிப்பதற்கு அவர்களுக்கு பல வருடங்கள் செல்கிறது. ஆதலால் பாலர்பாடசாலைக்கு முன்னதாகவே டொச்மொழியை கற்பது அவர்களுக்கு இன்றியமையாதது.
ஆதலால் கூர் மானில பாடசாலைச்சட்டத்தில் (இல.711 பந்தி 39) குறைவாக டொச் பேசும் குழந்தைகள் அல்லது டொச் பேசாத குழந்தைகள் இந்த டொச்மொழி ஊக்குவிப்பு வகுப்பான "பாடசாலைக்கான டொச" வகுப்புக்கு செல்ல வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் பங்குபற்றுதல் கட்டாய மயமாக்கப்படும்.

**சிறு குழந்தைகள் எவ்வாறு டொச்மொழியை கற்கின்றன?**

சிறு குழந்தைகள், அவர்கள் விரும்பினால் மாத்திரமே ஒன்றை கற்கமுடியும். அவர்களின் புறச்சூழல், அவர்களின் தொடர்புடைய நபர்கள் மற்றும் ஏனைய குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுதல் போன்றவற்றின் மூலமே ஒரு குழந்தை டொச்மொழியை கற்கிறது. ஸ்பீல்குறுப்ப, கின்டர்கிறிப்ப, ராகெஸ்பமிலி மற்றும் ஆரம்பக்கின்டர்கார்த்தன் போன்றவற்றில் பணிபுரிபவர்கள் விசேட தகமைபெற்றவர்கள். குழந்தைகளின் மொழியாற்றலை அவர்கள் விளையாட்டாவும் அதேவேளை இலக்கோடும் பயிற்றுவிக்கிறார்கள். இதன் மூலம் குழந்தைகள் தமது குழுக்களுக்கிடையில் முக்கிய அனுபவங்களை பெறுவதுடன், தமது சுய ஆற்றலை விருத்திசெய்துகொள்வதுடன் சுதந்திரமாகவும் செயல்பட தொடங்குகிறார்கள். குழந்தைகள் முழுமையாக ஊக்குவிக்கப்படுவார்கள்.



**என்னுடைய குழந்தைக்கு டொச் போதுமானதாகவுள்ளதா என்பதை எவ்வாறு கண்டுகொள்வது?**

கின்டர்கார்த்தன் ஆரம்பிப்பதற்கு அண்ணளவாக ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கூர் நகரசபை பெற்றோர்களுக்ககு ஓர் கேள்விப்படிவத்தை அனுப்பி வைக்கும். இக் கேள்விப்படிவத்தின் மூலம் பெற்றோர் தமது குழந்தையின் டொச் மொழியாற்றலை துல்லியமாக மதிப்பிடலாம். பேற்றோர் சுயமாக டொச் மொழியாற்றல் குறைவாக இருந்தாலும் இம்மதிப்பீட்டை செய்யலாம். இக் கேள்விப்படிவம் பாசல் பல்கலைக்கழகத்தினால் பல மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் இக்கேள்விப்படிவத்தினை உண்மையான முறையில் நிரப்பி திருப்பியனுப்ப வேண்டும். இதனுடைய பெறுபேறுகள் பெற்றோருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். குழந்தைக்கு டொச்மொழி கற்றல் தேவையெனில் அத்துடன் பாடசாலைக்கான டொச்மொழி வகுப்பில் பங்குபற்றுவதற்கான ஒரு விண்ணப்பபடிவமும் அனுப்பிவைக்கப்படும். இவ் வகுப்பில் குழந்தை பங்குபற்றப்போவதில்லையெனில் அதற்கான காரணத்தை எழுத்து மூலமாக கூர் நகரசபைக்கு அனுப்ப வேண்டும். பங்குபற்றாமைக்காக 292 வது குற்றவியல் சட்டத்தின் கீழ் அபராதம் வழங்கப்படலாம்.

**விண்ணப்பிப்பது எவ்வாறு?**

பேற்றோர்களுக்கு விண்ணப்பபடிவத்துடன் சேர்த்து ஸ்பீல்குறுப்ப, கின்டர்கிறிப்ப, ராகெஸ்பமிலி மற்றும் ஆரம்பக்கின்டர்கார்த்தன் அடங்கிய பட்டியலும் அனுப்பிவைக்கப்படும். அதில் ஒன்றை பெற்றோர் தெரிவுசெய்து அதனுடன் தொடர்புகொண்டு அங்கு ஒருநாள் பரீட்சித்து பார்க்கலாம். அதன்பிறகு அந்த இடத்தை பதிவுசெய்யலாம்.

**எவ்வளவு காலம் எனது குழந்தை இதில் பங்குபெறவேண்டும்?**

கின்டர்கார்த்தனுக்கு முன்னய வருடம் குழந்தைகள் வாரத்துக்கு இரண்டு அரைநாட்கள் அல்லது ஒரு முழுநாள் (குறைந்தது 6 மணித்தியாலங்கள்) டொச்மொழி கற்றலில் பங்குபெறவேண்டும். நாட்கள் தவறாமல் சமூகமளிக்கவேண்டும். ஸ்பீல்குறுப்புகள் கூர் நகர பாடசாலைவிடுமுறைக்கேற்றவாறு செயல்படுகின்றன. கின்டர்கிறிப்பகள் வழமையாக இவ்வகுப்புகளை 1. ஆகஸ்டில் ஆரம்பித்து 30. ஜூனில் முடிகிறது.

**பெற்றோர் எவ்வளவு பணம் செலுத்தவேண்டும்?**

இப் பராமரிப்புக்கான கட்டணத்தில் கூர் நகரசபை விகிதாசார அடிபடையில் பங்கெடுக்கிறது. ஒவ்வொருவரின் சொத்து மற்றும் வருமானத்தின் அடிப்படையில் 20 முதல் 80 வரையான விகிதத்தில் இச்செலவில் பங்குகொள்ளம்.

மேலதிக மணித்தியாலங்கள் அல்லது நாட்களுக்கு பெற்றோர் சுயமாக பணம் செலுத்தவேண்டும்.

## பெற்றோர் எவ்வாறு பங்குகொள்கிறார்கள்?

பாடசாலைக்கான டொச் மொழியில் பங்குகொள்ளும் குழந்தைகளின பெற்றோர்கள் வகுப்புவருடத்தின் எட்டு பெற்றோர்நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாம். இந்நிகழ்வுகளில் குழந்தைகளின் டொச் மொழியின் முன்னேற்றம், பாலர்பாடசாலை ஆரம்பம், சுவிஸின் கல்விமுறை மற்றும் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் சம்பந்தமான தகவல்கள் வழங்கப்படும். தொழில் பார்க்கும் பெற்றோர்கள் மற்றும் டொச்மொழி குறைந்த பெற்றோர்களும் இவ்வகுப்பில் கலந்துகொள்ளலாம். இப் பெற்றோருக்கான கல்விச்சலுகை இலவசமானது.

## தொடர்புகளுக்கு


Programm "Deutsch für die Schule"
Klostergasse 11, Postfach 810, 7001 Chur

☏ 081 254 46 24

✉ dfs@chur.ch


மேலதிக தகவல்களுக்கு: